# BSNL ஊழியர் சங்கம்
## தமிழ் மாநிலம்

**<u>சுற்றறிக்கை எண்</u>:164** **<u>தேதி</u>:-27.04.2017**

## BSNLன் புதிய திட்டங்கள் மற்றும் பல மத்திய சங்க செய்திகள்

அன்பார்ந்த தோழர்களே,

அனைத்து தனியார் நிறுவனங்களைக் காட்டிலும் மிகச்சிறப்பான திட்டங்களை BSNL நிறுவனம் அறிவித்துள்ளது.

1) 339 ரூபாய் STVயில் BSNL நெட்வர்க்கிற்கு கால வரையின்றி இலவசமாக பேசக்கூடிய வசதி கொண்ட இந்த திட்டத்தில் இதர நெட்வர்க்கிற்கு இலவசமாக ஒரு நாளைக்கு 25 நிமிடங்களும், அதற்கு மேல் பேசுவதற்கு ஒரு நிமிடத்திற்கு 25 பைசாவும் மட்டுமே கட்டணமாக பெறப்படுகிறது. அதுமட்டுமல்லாமல் இந்த திட்டத்தில் இதுவரை வரம்பில்லா டேட்டா பயன்படுத்தவும் அதில் 2 GB வரை உச்சபட்ச வேகத்திலும் அதற்கு மேல் குறைந்த வேகத்திலும் பயன்படுத்திக் கொள்ளலாம் என்று இருந்ததை தற்போது ஒரு நாளைக்கு 3GB வரை உச்சபட்ச வேகத்தில் பயன்படுத்திக் கொள்ள அனுமதிக்கப்பட்டுள்ளது. இது 28 நாட்கள் வரை பயன்படுத்தலாம்.
2) 349 ரூபாய் திட்டத்தில் அதே 28 நாட்கள் வரை பயன்படுத்தக் கூடிய நேரத்தில் அனைத்து நெட்வர்க்கிற்கும் கால வரம்பின்றி எத்தனை நேரம் வேண்டுமானாலும் கட்டணம் இல்லாமல் பேசலாம். இந்த 28 நாட்களுக்கு 2GB டேட்டா உச்ச பட்ச வேகத்தில் பயன்படுத்திக் கொள்ளலாம். அதற்கு மேல் குறைந்த வேகத்தில் வரம்பின்றி பயனபடுத்திக் கொள்ளலாம்.
3) 333 ரூபாய் திட்டத்தில் 90 நாட்களுக்கு எல்லையில்லா டேட்டாக்களை பயன்படுத்திக் கொள்ளலாம். ஒவ்வொரு நாளும் உச்சபட்ச வேகத்தில் 3GBக்களையும் அதற்கு மேல் 80 KBPS வேகத்திலும் பயன்படுத்திக் கொள்ளலாம்.
4) 395 ரூபாய் திட்டத்தில் 71 நாட்களுக்கு எல்லையில்லா டேட்டாக்களை பயன்படுத்திக் கொள்ளலாம். ஒவ்வொரு நாளும் உச்சபட்ச வேகத்தில் 2GBக்களையும் அதற்கு மேல் 80 KBPS வேகத்திலும் பயன்படுத்திக் கொள்ளலாம். அது மட்டுமல்லாமல் BSNL நெட்வர்க்கிற்கு 3000 நிமிடங்களும், இதர நெட்வர்க்குகளுக்கு 1800 நிமிடங்களும் இலவசமாக பேசிக்கொள்ளலாம். அதற்கு மேல் பேசுவதற்கு நிமிடத்திற்கு 20 பைசாக்கள் மட்டுமே கட்டணமாக பெறப்படும்.

இவை அனைத்தும் BSNL PREPAIந MOBILE சந்தாதாரர்களுக்கான புதிய திட்டங்கள்.

இது தவிர 01.05.2017 முதல் அனைத்து BROAந BANந திட்டங்களுக்கும் குறைந்த பட்ச வேகமாக 4MBPS இருக்கும் என BSNL நிறுவனம் அறிவித்துள்ளது.

பொது மக்களுக்கு மிகப்பெரிய அளவில் பயன் தரும் இவற்றை பயன்படுத்தி நமது வாடிக்கையாளர் எண்ணிக்கையை மேலும் கூட்டுவோம். நமது நிறுவனத்தை வளப்படுத்துவோம்.

மார்ச் மாதத்தில் 29.5 லட்சம் இணைப்புகளை BSNL நிறுவனம் புதிய சாதனை:- ஜியோ ஜுரத்தால் நாடு திணறிக் கொண்டுள்ள சூழ்நிலையில், இதர தொலைபேசி நிறுவனங்கள் போராடிக் கொண்டிருக்கும் நேரத்தில், அரசுத்துறை நிறுவனமான BSNL தனது வாடிக்கையாளர் எண்ணிக்கையை கூட்டி சாதனை படைத்துள்ளது.

BSNL ஊழியர் சங்கம் தலைமையில் அனைத்து சங்கங்களும் கூடி ஒரு மணி நேர கூடுதல் பணி செய்வது என்ற முடிவு அமலாகியுள்ள நிலையில் மார்ச் மாதத்தில் 29.5 லட்சம் புதிய மொபைல் இணைப்புகள் வழங்கி BSNL நிறுவனம் சாதனை செய்துள்ளது.

**நிதி இயக்குனராக திருமிகு சுஜாதா ரே:-** மனித வள இயக்குனர் திருமிகு சுஜாதா ரே 0103.2017 முதல் மேலும் ஆறு மாதங்களுக்கு நிதி இயக்குனர் பொறுப்பையும் சேர்த்து பார்ப்பதற்கான உத்தரவை கார்ப்பரேட் அலுவலகம் வெளியிட்டுள்ளது. BSNL போன்ற முக்கியமான நிறுவனத்திற்கு என்று தனியாக ஒரு இயக்குனரை நியமிக்காமல் கூடுதல் பொறுப்பு வழங்கும் அரசின் போக்கு தொடர்கிறது.

**அதிகமாக வழங்கப்பட்ட ஊதியத்தை பிடித்தம் செய்யக்கூடாது என்கிற பிரச்சனை**:- BSNL ஊழியர் சங்கத்தின் தொடர் வற்புறுத்தல் காரணமாக, ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட அதிகப்படியான ஊதியத்தை திரும்ப பிடிக்கக் கூடாது என்கிற உச்ச நீதிமன்ற தீர்ப்பை ஒவ்வொரு பிரச்சனையாக ஆராய்ந்து முடிவெடுப்பது என நிர்வாகம் ஏற்றுக் கொண்டுள்ளது. இதுதொடர்பாக தலைமை பொது மேலாளர்களுக்கு கடிதம் ஒன்றையும் எழுதியுள்ளது. ஆனால் மாநிலங்களில் இருந்து எந்த ஒரு பிரச்சனையும் வரவில்லை என கார்ப்பரேட் அலுவலகம் தொடர்ந்து கூறி வருகிறது. இது தொடர்பாக WTR மற்றும் உ.பி. கிழக்கு மாநிலங்களில் இருந்து மத்திய சங்கத்திற்கு வந்துள்ள மூன்று பிரச்சனைகலை கார்ப்பரேட் அலுவலகத்தில் உள்ள PGM(Estt)க்கு நமது மத்திய சங்கம் அனுப்பியுள்ளது.

**7100-200-10100 ஊதிய விகிதத்தில் இருந்து 6550-185-9320 ஊதிய விகிதத்திற்கு Sr.TOA க்களின் ஊதிய விகிதம் குறைத்தது தொடரபாக:-** NEPPக்கு விருப்பம் தெரிவித்த போது Sr.TOAக்களின் ஊதிய விகிதத்தை 7100-200-10100லிருந்து 6550-185-9320 என்று குறைத்த பிரச்சனையை தீர்வு காண வேண்டும் என நமது மத்திய சங்கம் தொடர்ந்து நிர்வாகத்தை வலியுறுத்தி வந்துக் கொண்டுள்ளது. இது தொடர்பாக நIRECTOR(HR) மற்றும் PGM(Estt) ஆகியோருடன் தொடர்ந்து விவாதித்து வருகிறது. இதற்கு முன்னர் BSNL ஊழியர் சங்கம் எழுதியுள்ள கடிதங்களை எல்லாம் இணைத்து மீண்டும் ஒருமுறை PGM(Estt)க்கு மற்றொரு கடிதத்தை நமது மத்திய சங்கம் 25.04.2017 அன்று எழுதியுள்ளது.

**டெலிகாம் டெக்னீசியன் இலாகா தேர்விற்கான கல்விதகுதியை குறைக்க PGM(Estt)க்கு கடிதம்:-** டெலிகாம் டெக்னீசியன் இலாகா தேர்விற்கான கல்வி தகுதியை பத்தாம் வகுப்பு இருக்க வேண்டும் என்ற கட்டுப்பாட்டை தளர்த்த வேண்டும் என BSNL ஊழியர் சங்கம்

தொடர்ந்து வலியுறுத்தி வந்துள்ளது. இது தொடர்பாக பல கட்ட பேச்சு வார்த்தை நடைபெற்றுள்ளது. இது தொடர்பாக 26வது தேசிய கவுன்சில் கூட்டத்தில் நடைபெற்ற விவாதங்களை எடுத்துக் காட்டி நமது மத்திய சங்கம் PGM(Estt) க்கு கடிதம் மீண்டும் ஒரு கடிதம் எழுதியுள்ளது.

இந்த தேர்விற்காக நிர்ணயிக்கப்பட்ட தேர்வு கட்டணத்தை ரத்து செய்ய வேண்டுமென நமது மத்திய சங்கம் கடுமையாக வாதிட்டுள்ளது. 19.04.2017 அன்று திருமிகு அனிமா ராய் GM(Rectt) அவர்களை சந்தித்து நமது பொது செயலாளர் தோழர் P.அபிமன்யு அவர்கள் வலியுறுத்திய போது இந்த பிரச்சனையை நிர்வாகம் விவாதித்து வருவதாகவும், சாதகமான முடிவுகள் எடுக்கப்படலாம் என உறுதி அளித்துள்ளார்.

**ஒரு சில வருடங்களுக்கு முன் BSNL ஊழியர் சங்கம் விடுத்த கருணை நிதி அமைக்கும் திட்டத்தை நிராகரித்த நிர்வாகம் தற்போது முன் வந்துள்ளது:-** சேவையில் உள்ள ஊழியர்கள் இறந்தார்கள் என்று சொன்னால் அவர்கள் குடும்பத்தாருக்கு நிதி உதவி செய்ய ஒரு கருணை நிதியை கார்ப்பரேட் அலுவலகம் உருவாக்க வேண்டும் என்றும் அதற்கு விருப்பப்பட்ட ஊழியர்களிடம் இருந்து மாதந்திரம் ஒரு தொகையை வசூலிக்கலாம் என்றும் BSNL ஊழியர் சங்கம் ஒரு சில வருடங்களுக்கு முன் ஒரு கோரிக்கையை நிர்வாகத்திடம் வைத்தது. ஆனால் அந்த சமயத்தில் அதன் மீது ஒரு கவனத்தை செலுத்தாமல் நிர்வாகம் அதனை நிராகரித்து விட்டது. தற்போது நிர்வாகம் அதே கோரிக்கையை நமது கருத்துக்களைக் கேட்டு கடிதம் கொடுத்துள்ளது. அதன் மீதான கருத்துக்களை மாவட்ட மாநில செயலாளர்கள் அனுப்ப வேண்டும் என மத்திய சங்கம் கேட்டுக் கொண்டுள்ளது.

**e-KYCயில் சுமத்தப்பட்ட கட்டுப்பாட்டை தளர்த்தக் கோரி இயக்குனருக்கு கடிதம்:-** e-KYC மூலம் மொபைல் சிம் கார்ட்களை ACTIVATE செய்யப்பட்டு வருகின்றன. எனினும் ஒரு சந்தாதாரருக்கு ஒரு e-KYC தான் ஒரு வாடிக்கையாளர் சேவை மையத்தில் வழங்க முடியும் என்ற கட்ட்ப்பாடு உள்ளது. இது சிம் கார்ட்களை வேகமாக ACTIVATE செய்வதில் பிரச்சனை ஏற்பட்டுள்ளது. இந்தக் கட்டுப்பாட்டை நீக்க வேண்டும் என DIRECTOR(CM)க்கு கடிதம் ஒன்றை நமது மத்திய சங்கம் கடிதம் எழுதியுள்ளது.

**இரண்டாவது பட்டியலில் இடம் பெறாத நேரடி நியமன JE தேர்வாளர்களின் பிரச்சனையை மீண்டும் நமது மத்திய சங்கம் எடுத்துள்ளது:-** 19.04.2017 அன்று திருமிகு அனிதா ராய் GM(Estt) அவர்களை சந்தித்த நமது பொது செயலாளர் தோழர் P.அபிமன்யு அவர்கள் இரண்டாவது பட்டியலில் இடம் பெறாத நேரடி நியமன JE தேர்வாளர்களின் பிரச்சனையை விவாதித்தனர். 2017 மே மாதம் 15ஆம் தேதி அன்று அனைத்து தேர்வாளர்களும் பயிற்சிக்கு அனுப்பப்பட்ட பின்னர் தான் காலிப்பணியிட விவரங்கள் முழுமையாக தெரியும் என்றும் அதற்கு பின்னர் அது தொடர்பாக முடிவெடுக்கப்படும் என்றும் அவர் பதிலளித்துள்ளார். நமது பொது செயலாளர் மே 15க்கு பின் உடனடியாக இரண்டாவது பட்டியலில் இடம் பெறாத நேரடி நியமன JE தேர்வாளர்களை பரிசீலிக்க வேண்டும் என வலியுறுத்தி உள்ளார்.

**மேலும் ஒரு நேரடி நியமன JE தேர்வை நடத்துக**- BSNL ஊழியர் சங்கம் கோரிக்கை:- 19.04.2017 அன்று நமது பொது செயலாளர் தோழர் P.அபிமன்யு மற்றும் துணை பொது செயலாளர் தோழர் சுவபன் சக்கரவர்த்தி ஆகியோர் PGM(Estt) திருமிகு மது அரோரா அவர்களை சந்தித்து JEக்கள் பலர் JTOஆக பதவி உயர்வு பெற்றுள்ள சூழலில் JE கேடரில் உள்ள அதிகமான காலிப்பணியிடங்களை கணக்கில் கோண்டு மேலும் ஒரு நேரடி JE தேர்வை நடத்த வேண்டும் என வலியுறுத்தி உள்ளனர். இதனை சரியான முறையில் கவனித்து முடிவு எடுப்பதாக திரு மிகு மது அரோரா உறுதி அளித்துள்ளார்.

**35ஆவது தேசிய கவுன்சில் கூட்டம் 11.05.2017 அன்று நடைபெறலாம்**:- 35ஆவது தேசிய கவுன்சில் கூட்டம் அநேகமாக 11.05.2017 அன்று நடைபெறலாம் என திரு A.M.குப்தா GM(SR) தெரிவித்துள்ளார். எனினும் மனித வள இயக்குனரின் ஒப்புதலுக்கு பின் முறையாக அறிவிக்கப்படும் என்றும் தெரிவித்துள்ளார்.

35ஆவது தேசியக் கவுன்சில் கூட்டத்திற்கு வழங்கப்பட்ட ஆய்படு பொருட்களை ஊழியர் தரப்பு செயலாளர் தோழர் P.அபிமன்யு ஏற்கனவே வழங்கியுள்ளார். இவற்றில் நான்கு ஆய்படு பொருட்களின் மேல் நடவடிக்கை எடுக்கப்பட்டு விட்டதாகவும், எடுக்க இருப்பதாகவும் கூறி அவற்றை கைவிட வேண்டும் என ஊழியர் தரப்பை கார்ப்பரேட் அலுவலகத்தின் ஊழியர் உறவு (SR) பிரிவு கேட்டுக் கொண்டு கடிதம் எழுதியுள்ளது. இது சரியான முறை அல்ல என BSNL ஊழியர் சங்கம் தனது ஆட்சேபனையை தெரிவித்துள்ளது.

**BSNL ஊழியர்களுக்கு GPF முன்பணம் வழங்குவதை DOT ஏற்றுக்கொள்ள இருக்கிறது**:- நமது மத்திய சங்கம் முன்னரே தெரிவித்த படி BSNL ஊழியர்களுக்கு முன் பணம் வழங்கும் பொறுப்பை DOT ஏற்றுக் கொண்டுள்ளது. எனினும் GPF முன் பணம் வழங்குவதற்கான SANCTIONஐ தற்போதுள்ளதை போலவே மாவட்ட தலைமை அதிகாரிகளே செய்வார்கள். இதன் காரணமாக எந்த விதமான புதுவித கட்டுப்பாடுகளும் இருக்காது. ஊழியர்களின் வங்கிக் கணக்கில் பணத்தை செலுத்துவதை மட்டும் அந்தந்த மாநில CCAக்கள் செய்வார்கள். DOT இந்த பொறுப்பை இரண்டு கட்டமாக மேற்கொள்ளும். முதல் கட்டத்தில் அஸ்ஸாம், பீகார், கார்ப்பரேட் அலுவலகம், சட்டிஸ்கர், ஹரியானா, குஜராத், இமாசல பிரதேசம், ஜார்கண்ட், மத்திய பிரதேசம், ராஜஸ்தான், உத்தராஞ்சல் மற்றும் மேற்கு வங்காளம் ஆகிய 12 மாநிலங்கள் முதல் கட்டத்திலும் தமிழகம் உள்ளிட்ட இதர மாநிலங்கள் இரண்டாவது கட்டத்திலும் DOT ஏற்றுக் கொள்ளும்.

**விடுபட்ட கேடர்களுக்கான பெயர் மாற்றத்தில் ஒருமித்த கருத்து ஏற்பட்டுள்ளது**:- 18.04.2017 அன்று விடுபட்ட கேடர்களுக்கான பெயர் மாற்றக் குழுவின் கூட்டம் நடைபெற்றது. நமது பொது செயலாளர், தலைவர் மற்றும் துணைப் பொது செயலாளர் ஆகியோர் நமது சங்கத்தின் சார்பாக கலந்துக் கொண்டனர். விரிவான விவாதங்களுக்கு பின் ஆயா, பேரர், பெல்தார், சவுக்கிதார், க்ளீனர், டப்திரி, ஃபாரஷ், கலாசி, பெண் சவுக்கிதார், மாலி, ஆபிஸ் ப்யூன், ப்யூன், சஃபாய்வாலா, ஷ்ரமிக், ஸ்வீப்பர், வாஷ் பாய், டிஷ் பாய், கேட் மேன், வாட்டர் மேன் ஆகிய 19 கேடர்களுக்கு ASSISTANT TELECOM TECHNICIAN என பெயர் மாற்றம் செய்ய இந்தக் குழுவில் ஒருமித்த கருத்து ஏற்பட்டுள்ளது.

இந்த குழுவில் ஒருமித்த கருத்து ஏற்பட்டதென்றாலும் நிர்வாகக் குழுவின் இறுதி முடிவுக்கு உட்பட்டது. மீதமுள்ள கேடர்களின் பெயர் மாற்றம் தொடர்பாக விவாதிக்க அடுத்த கூட்டம் 26.06.2017 அன்று நடைபெறும்.

**தீவிரவாதிகளின் தாக்குதலில் கொல்லப்பட்ட 25 BSF வீரர்களுக்கு அஞ்சலி:-** சட்டிஸ்கர் மாநிலத்தில் உள்ள சுக்மா என்ற இடத்தில் தீவிரவாதிகள் தாக்குதலில் 25 எல்லை பாதுகாப்பு படை வீரர்கள் கொல்லப்பட்டுள்ளனர். இதில் தமிழகத்தை சார்ந்த வீரர்கள் மூவர். மத்திய மாநில அரசுகள் மாவோயிஸ்ட் பிரச்சனைகளுக்கு ஒரு அரசியல் தீர்வைக் காண தவறியுள்ளது துரதிருஷ்டவசமாகும். தேசத்தை காக்கும் தனது பணியில் ஈடுபட்டு உயிரிழந்த 25 எல்லை பாதுகாப்பு படை வீரர்களுக்கு தனது அஞ்சலியை BSNL ஊழியர் சங்கம் உரித்தாக்குகிறது. அவர்களது பிரிவால் வாடும் அவரகளின் குடும்பத்தாருக்கு தனது ஆழ்ந்த இரங்கலையும் தெரிவித்துக்கொள்கிறது.

**பொதுத்துறை நிறுவனமான LICயில் அற்புதமான செயல்பாடு:-** காப்பீட்டு துறையில் உள்ள பொதுத்துறை நிறுவனமான LIC தனது சந்தை பங்கீட்டை தொடர்ந்து அதிகரித்து வருகிறது. மார்ச் 2015ல் 69.02%, மார்ச் 2016ல் 70.04% என்றிருந்த LICயின் சந்தை பங்கீடு மார்ச் 2017ல் 71.07%ஆக உயர்ந்துள்ளது. காப்பீட்டுத் துறையில் இந்திய மற்றும் பன்னாட்டு நிறுவனங்கள் LICயுடன் போட்டி போட்டு வந்தாலும், பொதுத்துறை நிறுவனமான LIC, மிகச் சிறப்பாக வாடிக்கையாளர்களுக்கு திருப்திகரமான சேவையை கொடுத்து வருவதன் மூலம் தனது உறுதியான ஸ்தானத்தை தக்க வைத்துக் கொண்டுள்ளது. இந்த அற்புதமான செயல்பாட்டிற்காக LIC மற்றும் அகில இந்திய காப்பீட்டு ஊழியர் சங்கம் ஆகியவற்றிற்கு BSNL ஊழியர் சங்கம் தனது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறது.

**BSNL அதிகாரிகள் சங்கங்களின் கூட்டமைப்பு நடத்தும் போராட்டங்களுக்கு BSNL ஊழியர் சங்கம் ஆதரவு:-** நேரடி நியமன ஊழியர்களுக்கான ஓய்வு கால பலன்கள் மற்றும் சில கோரிக்கைகளை முன்வைத்து 25.04.2017 முதல் தொடர் உண்ணாவிரதம், ஒட்டு மொத்த சிறு விடுப்பு மற்றும் விதிப்படி வேலையுடன் கூடிய காலவரையற்ற தொடர் உண்ணாவிரதம் என பல்வேறு போராட்டங்களுக்கு JOINT FORUM OF BSNL EXECUTIVES ASSOSCIATIONS அறைகூவல் விட்டுள்ளது. அவர்கள் நமது மத்திய சங்கத்தின் ஆதரவையும், ஒருமைப்பாட்டையும் கோரியுள்ளனர். நமது மாவட்ட மாநில சங்கங்கள் அவர்களுக்கு முழு ஆதரவை தெரிவிக்க வேண்டும் என நமது மத்திய சங்கம் கேட்டுக்கொண்டுள்ளது.

**மேதினத்தை சிறப்பாக கொண்டாட மத்திய சங்கம் அறைகூவல்:-**
BSNL உள்ளிட்ட பொதுத்துறை நிறுவனங்களை பங்கு விற்பனை, கேந்திர பங்கு விற்பனை மற்றும் தனியார்மயமாக்கல் உள்ளிட்ட செயல்பாடுகள் மூலமாக பொதுத்துறைகளை சீரழிக்கும் தாக்குதல்களை மோடி அரசாங்கமும் அதன் நிதி ஆயோக்கும் தொடுத்து வருகிறது. மத்தியில் ஆளும் பாஜக அரசாங்கமும், பல்வேறு மாநில அரசாங்கங்களும் தொழிலாளர் நல சட்டங்களை திருத்துவது என்ற பெயரால் இந்திய உழைப்பாளி வர்க்கம் போராடி பெற்ற பல சலுகைகளை திரும்ப பெறுகின்றன.

மதத்தின் பெயரால் மதவாத சக்திகளால் உழைக்கும் வர்க்கத்தின் ஒற்றுமையையும் போராட்டங்களையும் பலவீனப்படுத்தப்பட்டு வருகின்றன. அரசாங்கத்தை விமர்சிப்பவர்கள் தேச விரோதிகள் என முத்திரை குத்தப்பட்டு பேச்சுரிமை மறுக்கப்படுகிறது.

இந்த ஆண்டு மே தினத்தை கொடியேற்றி வாயிற்கூட்டங்களை நடத்தி, 8 மணி நேர வேலைக்கான போராட்டம் மற்றும் மே தின தியாகிகளின் தியாகங்களை போற்றும் வகையில் மிகச்சிறப்பாக கொண்டாட வேண்டும் என மத்திய சங்கம் அறைகூவல் விட்டுள்ளது. இவற்றுடன் கீழே தரப்பட்டுள்ள பிரச்சனைகளையும் இந்தக் கூட்டங்களில் பிரதானப்படுத்த வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டுள்ளது.

அ) BSNL உள்ளிட்ட பொதுத்துறை நிறுவனங்களில் பங்கு விற்பனை/ கேந்திர பங்கு விற்பனை மற்றும் தனியார்மயமாக்கல் கூடாது. BSNLல் துணை டவர் நிறுவனம் அமைக்கக் கூடாது.

ஆ) தொழிலாளர் நலச்சட்டங்களில் கொண்டு வந்துள்ள திருத்தங்களை திரும்ப பெறுக. உழைக்கும் வர்க்கம் போராடி பெற்ற உரிமைகளை பறிக்காதே.

இ) பேச்சுரிமை மீதான தாக்குதலை தடுத்து நிறுத்து. தேசத்தில் மதசார்பின்மை மீதான தாக்குதலை தடுத்து நிறுத்து.

அனைத்து கிளை, மாவட்ட சங்கங்களும் மேதினக் கொண்டாட்டங்களை சிறப்பாக நடத்தி புகைப்படங்களுடன் செய்தியை மாநில சங்கத்திற்கும், மத்திய சங்கத்திற்கும் அனுப்பி வைக்கவும்.

வாழ்த்துக்களுடன்,

தோழமையுள்ள,

**(A.பாபு ராதாகிருஷ்ணன்)**
**மாநில செயலாளர்**